04.09.2013

தினமணி

## கோயம்பேடு மார்க்கெட்டில் வெங்காயம் விலை கிலோவுக்கு ரூ.20 குறைந்தது



கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வெங்காய வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலை கிலோவுக்கு ரூ.20 வரை குறைந்துள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு மகாராஷ்டிரத்தில் இருந்து பெரிய வெங்காயம் வருகிறது. இந்த ஆண்டு வட மாநிலங்களில் போதிய விளைச்சல் இல்லாததால், கடந்த சில மாதங்களாக நாடு முழுவதும் வெங்காயத்தின் விலை உயர்ந்தது.

இதன் காரணமாக சென்னையின் பிரதான சந்தையான கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.60 வரை விற்பனையானது. இந்நிலையில் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து தற்போது கோயம்பேட்டுக்கு வெங்காயம் வருகிறது.

இதையடுத்து அதன் விலை கிலோவுக்கு ரூ.20 வரை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கோயம்பேடு வியாபாரிகள் சங்க நிர்வாகி செப்ந்திரராஜன் கூறியதாவது:- போதிய விளைச்சல் இல்லாததால் 40 லாரி வெங்காயம் மட்டுமே மார்க்கெட்டுக்கு வந்தன. தற்போது வெங்காய வரத்து 60 லாரிகளாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக அதன் விலை கணிசமாகக் குறைந்துள்ளது.

கர்நாடகம் மற்றும் ஆந்திரத்திலிருந்து வரும் வெங்காயத்தின் விலை கிலோ ரூ.40 லிருந்து ரூ.45 வரை விற்கப்படுகிறது. மகாராஷ்டிரத்தில் வெங்காயத்தின் விலை குறையாததால், அங்கிருந்து வரும் வெங்காயத்தின் விலை கிலோ ரூ.55-க்கே விற்பனை செய்யப்படுகிறது.

சில்லறை விற்பனைக் கடைகளில் இந்த விலையை விட கிலோவுக்கு ரூ.10 வரை கூடுதலாக விற்கப்படுகிறது. வரும் நாள்களில் பெரிய வெங்காயத்தின் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தரர்.

வெங்காயத்தின் விலையைத் தொடர்ந்து காய்கறிகளின் விலையும் இந்த வாரத்தில் குறைந்துள்ளது. வரத்து அதிகரிப்பு மற்றும் விற்பனைக் குறைவு காரணமாக காய்கறிகளின் விலை சரிந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

---

**மழையால் பாதிக்கப்பட்ட ஏல விவசாயிகள் மறுநடவு செய்ய புதிய நாற்றுகள்**

ஏல விவசாயத்தில் புதிய நாற்றுகள் நடுவதற்கு, மத்திய ஸ்பைசஸ் வாரியம் மானியம் வழங்குவதாக அறிவித்துள்ளது.

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் ஏல விவசாயம் அதிக அளவில் நடந்து வருகிறது. இதில், பெருபான்மையான விவசாயிகள் தமிழகத்தில் உள்ள தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். சில வாரங்களுக்கு முன், தென்மேற்குப் பருவமழை இடுக்கி மாவட்டம் முழுவதும் பெய்தது.

இதனால், ஏலச் செடிகள் பாதிக்கப்பட்டன. புதிய நாற்றுகள் நடவேண்டிய அவசியம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக, விவசாயிகளுக்கு புதிய நாற்றுகள் மறுநடவு செய்வதற்கு, மத்திய ஸ்பைசஸ் வாரியம் மானியம் வழங்கி வருகிறது. இதில், கால் ஏக்கர் முதல் 20 ஏக்கர் வரை வைத்திருக்கும் விவசாயிகள் இந்த மானியத்தைப் பெறலாம்.

மேலும், அதிக உற்பத்தி செய்யும் ஏல விவசாயிக்கு முதல் பரிசாக ரூ. 1 லட்சம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பத்தையும், மானியம் பெறுவதற்கான தகவலையும் பெற, குமுளி, வண்டிப் பெரியாறு கிராமங்களில் உள்ள விவசாயிகள் 04869-222015 என்ற எண்ணையும், ஆனை விலாசம், ஜக்குபள்ளத்தைச் சேர்ந்தவர்கள் 04868-283635 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

---

## அரசு விற்பனை நிலையங்களில் விவசாயிகளின் தேவைக்கேற்ப தானிய விதைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விருதுநகர் மாவட்டத்தில் அரசு விற்பனை நிலையங்களில் தேவையான தானிய விதைகள் போதுமான அளவில் கிடைப்பதில்லை என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 1.50 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் உள்ளன. அதில், தற்போது 1.20 லட்சம் ஹெக்டேரில் மானாவாரியிலும், பம்ப்செட் மூலமும் விவசாயம் நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் விவசாயிகள் அனைவரும் ஆர்வத்துடன் விதைப்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் விவசாயிகளுக்கு தேவையான விதைகள் கூட்டுறவு வேளாண்மை வங்கி மற்றும் வேளாண்மை வட்டார வளர்ச்சி அலுவலக விதை விற்பனை நிலையங்களில் மானியம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக அந்தந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களுக்கேற்பவே விதை விற்பனை நிலையங்களில் மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இம்மையங்களில் கடலை, கம்பு, நெல், பாசிப்பயறு, தட்டைப்பயறு உள்ளிட்டவைகள் மட்டுமே கிடைக்கிறது. தற்போது, உடல் நலத்திற்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் கேப்பை, குதிரைவாலி, கானப்பயறு, வரகு, இரும்புச்சோளம், மொச்சை உள்ளிட்ட தானிய உற்பத்தியை பெருக்குவதற்கு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், அரசு விற்பனை நிலையங்களில் இதுபோன்ற தானிய விதைகள் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். ஏனென்றால் தானிய உற்பத்தியை பெருக்குவதற்கேற்ப காலச்சூழ்நிலை ஆடிப்பட்டத்தில் தான் உண்டு. அதனால், இந்த பட்டத்தில் விவசாயிகள் அனைவரும் மானாவாரி நிலங்களில் வறட்சியை தாங்கி வளரக்கூடிய தானியப் பயிர்களை அதிகமாக பயிரிட்டு வருகின்றனர்.

இது குறித்து நீர்ப்பாசன சங்கத்தின் வட்டார செயலாளரான திருவேங்கடராமனுஜம் கூறுகையில், தானிய விதைகள் வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் வேளாண்மை வட்டார வளர்ச்சி மையங்களில் தேவைக்கேற்ப இருப்பு இல்லை.

விதைகள் தேவைப்படும் விவசாயிகள் தரமான விதைகளா என்பதை ஆய்வு செய்யாமலே வாங்கி விதைப்பதால்முளைப்புத் திறன் இல்லாமல் போனால் விவசாயிகள் நஷ்டம் அடையும் நிலையேற்படுகிறது.

இதேபோல், இம்மாவட்டத்தில் தொடக்கத்தில் 7 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட மக்காச்சோளம், தற்போது 35 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இருந்தும் இதுவரையில் போதுமான அளவு மக்காச்சோள விதை அரசு விற்பனை நிலையங்களில் கிடைக்காமல் வெளியிடங்களில் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே அனைத்து அரசு விதை விற்பனை நிலையங்களிலும் தரமான விதைகள் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

இது குறித்து விவசாயத் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், இந்த மாவட்டத்தில் குறுதானியம் பயிரிடுவதற்கு பல்வேறு திட்டங்களை வேளாண்மை துறை செயல்படுத்தி வருகிறது.

மக்காச்சோள விதைகள் அனைத்தும் வீரிய ஒட்டு ரகம் தான் அதிகமாக பயிரிட்டு வருகின்றனர். அதனால், உற்பத்தி செய்ய முடியாத நிலை இருக்கிறது.

இதுபோன்ற காரணங்களால் தான் தனியார் விதை விற்பனை நிலையங்களில் வாங்கி பயிரிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

---

## ஈரோட்டில் மின்னணு முறையில் விரைவில் மஞ்சள் ஏலம்

ஈரோடு அருகே அவல்பூந்துறையில் மின்னணு ஏல முறையில் மஞ்சள் விரைவில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இப் புதிய தொழில்நுட்பத்தில் மஞ்சள் ஏலமிடப்படுவது இதுதான் முதல்முறை என வேளாண் விற்பனைக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவில் ஆந்திரம், தமிழகம், மகாராஷ்டிரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் அதிகளவு மஞ்சள் பயிரிடப்படுகிறது. நாடு முழுவதும் 15 லட்சம் ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மகாராஷ்டிர மாநிலத்தில் சாங்கிலி, ஆந்திர மாநிலத்தில் நிஜாமதாபாத், தமிழகத்தில் ஈரோடு ஆகிய 3 இடங்களில் மட்டுமே தேசிய அளவில் புகழ்பெற்ற மஞ்சள் சந்தைகள் உள்ளன. ஈரோட்டில் மஞ்சளை விற்பனை செய்ய தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்தும், கர்நாடக மாநிலம் மைசூர், சாம்ராஜ் நகர் பகுதிகள் மற்றும் கேரளத்தில் இருந்தும் விவசாயிகள் வருகின்றனர்.

அதேபோல, வெளி மாநிலங்களில் இருந்து வியாபாரிகளும் வந்து செல்கின்றனர். ஈரோட்டில் இப்போது ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கூட்டுறவுச் சங்கம், ஈரோடு

மஞ்சள் கிடங்கு உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் சார்பில் நடத்தப்படும் மண்டிகள் மூலமாக மஞ்சள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந் நிலையில், மஞ்சளை மின்னணு முறையில் ஏலம் விட வேளாண் விற்பனைக் குழு புதிய முறையை விரைவில் அமல்படுத்தவுள்ளது. நேஷனல் கமாடிட்டி டெரிவேட்டிவ் எக்ஸ்சேஞ்ச் என்னும் நிறுவனம் இதற்கான மென்பொருளை (கம்டிராக்) வேளாண் விற்பனைக் குழுவுக்கு வழங்கியுள்ளது.

ஈரோடு அருகே அவல்பூந்துறையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக்கூட வளாகத்தில் இதற்கான ஏல மையம் உருவாக்கப்பட்டுள்ளது. மஞ்சளைக் கொள்முதல் செய்வதற்காக 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஈரோடு வேளாண் விற்பனைக் குழு உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் 277 இடங்களில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் செயல்படுகின்றன. இதன் மூலமாக கொப்பரை, மஞ்சள், எள், பருத்தி, வாழை உள்பட சுமார் 50 வகையான வேளாண் பொருள்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களில் முதல்முறையாக மின்னணு முறை ஈரோட்டில் விரைவில் தொடங்கப்படவுள்ளது. தமிழகத்தைப் பொருத்தவரை மஞ்சளுக்கான முதல் மின்னணு ஏல மையம் இதுதான். இம் மையத்தில் ஏலமுறையை எப்படிச் செய்யலாம் என ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

நேஷனல் டெரிவேட்டிவ் கமாடிட்டி எக்ஸ்சேஞ்ச் நிறுவனத்தில் உறுப்பினர்களாக வியாபாரிகள் சேர்ந்தால் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் இணையதளம் மூலமாக இந்த ஏலத்தில் பங்கேற்க முடியும்.

ஏல நடைமுறை குறித்து விவாதிக்க விவசாய ஆர்வலர் குழு, உழவர் உற்பத்திக் குழு, விளைபொருள் குழு, பண்ணை ஒப்பந்ததாரர் குழு உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறோம். இம் மையம் மூலமாக விற்பனை செய்யும்போது தரம் பிரிக்கப்பட்ட மஞ்சளையே விவசாயிகள் விற்பனை செய்ய முடியும். ஆனால், நல்ல விலை கிடைக்கும் என்றார்.

---

## மரவள்ளிக் கிழங்கு விலை சரிவு: விவசாயிகள் கவலை

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு விலை சரிந்ததால் விவசாயிகள் கவலையடைந்தனர்.

பரமத்திவேலூர் வட்டத்தில் எஸ்.வாழவந்தி, பெரியகரசபாளையம், செங்கப்பள்ளி, பரமத்தி, கூடச்சேரி, கபிலர்மலை, சின்னமருதூர், சோழசிராமணி, பெருங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் கிழங்குகள் புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, மலவேப்பங்கொட்டை, ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரைவை ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஆலைகளில் மரவள்ளிக் கிழங்கில் இருந்து ஜவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு தயார் செய்யப்படுகிறது. மேலும், சிப்ஸ் தயார் செய்யவும் வியாபாரிகள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர். மரவள்ளிக் கிழங்குகளை பெறும் மில் உரிமையாளர்கள் கிழங்கில் உள்ள ஸ்டார்ச் மற்றும் கிழங்கின் அடர்த்தி அடிப்படையில் விலை நிர்ணயம் செய்கின்றனர். கடந்த வாரம், மரவள்ளிக் கிழங்கு மில்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.13,500-க்கும், சிப்ஸ் தயாரிப்புக்கு ரூ.17,500-க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

இந்த வாரம் மில்களுக்கு ரூ.12,000-க்கும், சிப்ஸ் தயாரிப்புக்கு ரூ.13,000-க்கும் வாங்கிச் சென்றனர். கொல்லிமலை உள்ளிட்ட பகுதிகளில் தற்போது உற்பத்தி அதிகரித்துள்ளதால் மரவள்ளிக் கிழங்கின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். விலை சரிவால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

---

## செப்.6 -ல் விவசாயிகளுக்கு தீவனப்பயிர் சாகுபடிப் பயிற்சி

புதுக்கோட்டை அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தில் தீவனப்பயிர் சாகுபடி குறித்த பயிற்சி முகாம் வரும் வெள்ளிக்கிழமை(செப்.6ம்தேதி) நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட தகவல்: இன்றைய காலக்கட்டத்தில் விவசாய நிலங்கள் பரப்பளவு குறைந்து கொண்டு வருகிறது. அதனால் கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல் மற்றும் பசுந்தீவனப் புல் கிடைப்பது அரிதாக உள்ளது.

மாவட்டத்தில் புல்வெளி சுமார் 5,400 ஹெக்டேர் பரப்பளவில் உள்ளது. இந்நிலையில், கால்நடைகளுக்கு பசுந்தீவனத்திற்கு தீவனப்புல் பயிர்களான கம்பு நேப்பியர் புல் (கோ-4), தீவன மறுதாம்பு சோளம் (கோ29), கினிப்புல் (கோ2), தீவன தட்டைப்பயிறு (கோ-5), முயல் மசால், வேலி மசால் போன்ற பயிறு வகை தீவனப்பயிர்களையும், சுபா புல், அகத்தி போன்ற மரப்பயிர்கள் ஆகியவற்றின் சாகுபடி குறித்து பயிற்சி வரும் வெள்ளிக்கிழமை வம்பன் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தில் அளிக்கப்பட உள்ளது. இதில் ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கேற்கலாம். மேலும் விவரங்களுக்கு, 94447 19043 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

---

### சம்பா நெல் சாகுபடி: அதிக மகசூல் பெற வேளாண்துறை யோசனை

சம்பா நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் வெளியிட்ட தகவல்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். சம்பா பருவத்திற்கு அதிக மகசூல் தரக்கூடிய ரகங்களான பி.பி.டி. 5204 (சம்பா மசூரி), வெள்ளைப்பொன்னி, ஆடுதுறை- 39, கோ- 50, திருச்சி- 1. ஆகியவைகளை சம்பா பருவத்தில் (ஆகஸ்ட் - ஜனவரி) மத்தியகால ரகம் (125 - 135 நாட்கள்), நீண்ட கால (140 கால நாட்கள்) நெல் ரகங்களை சாகுபடி செய்ய வேண்டும்.

விதைநேர்த்தி செய்வதன் மூலம் குலைநோய், இலைப்புள்ளி நோய், பாக்டீரியா இலை அழுகல் நோய் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தலாம். விதை நேர்த்தியில் உலர் விதை நேர்த்தியில், நெல் விதைகளை தண்ணீரில் ஊறவைக்கும் முன் கார்பன்டாசிம் ரசாயன மருந்தை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் பயன்படுத்தலாம். ஈர விதை நேர்த்தியில், கார்பன்டாசிம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் கலந்து அதில் 1 கிலோ நெல் விதைகளை 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

வளமான நாற்றங்கால் அமைக்க, 8 சென்ட் நாற்றங்காலுக்கு 40 கிலோ தொழு உரமிட்டு உழவு செய்ய வேண்டும். கடைசி உழவிற்கு முன் 16 கிலோ டி.ஏ.பி. அல்லது 6 கிலோ யூரியா மற்றும் 48 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடுவது அவசியம்.

நாற்றுகளின் வயது குறுகிய கால ரகங்களுக்கு (100 - 110 நாட்கள்) 18 - 22 நாட்களும், மத்திய கால (125 - 135 நாட்கள்) ரகங்களுக்கு 25 - 30 நாட்களும், நீண்டகால ரகங்களுக்கு (140 நாட்கள்) 35 - 50 நாட்களும் ஆகும். சான்று பெற்ற நெல் விதைகள் தமிழ்நாடு அரசு வேளாண் துறையின் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் கிடைக்கும். எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் அனைவரும் மேற்கண்ட தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து சம்பா நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம்.

### "7 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டில் 7 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் உணவு தானிய இயக்கம் தொடர்பாக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட அளவிலான விவசாயிகள், அலுவலர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்துக்குத் தலைமை வகித்து அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் நிகழாண்டு 7 லட்சத்து 75 ஆயிரம் மெட்ரிக் டன் நெல்லும், 9,900 மெட்ரிக் டன் சிறு தானியங்களும், 28,900 மெட்ரிக் டன் பயறு வகைகளும் என மொத்தம் 7.46 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகள் அளவிலும், கிராம அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் உணவு தானிய செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகள், வேளாண் விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகளை ஒருங்கிணைத்து பயிர் திட்டம் தயாரித்தல், நெல், சிறு தானியங்கள் மற்றும் பயிறு வகைகளுக்கான இயக்கத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலமாக உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெறத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதே உணவு தானிய இயக்கத்தின் நோக்கம். உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு பழைய ரகங்களுக்குப் பதிலாக புதிய ரகங்களை வெளியிடுதல், திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்தல் உள்ளிட்ட தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. மேலும், புதிய ரகங்கள் மற்றும் தொழில்நுட்பச் செயல்விளக்கம் அளித்தல், உரிய காலத்தில் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட திட்ட மேம்பாட்டு நடவடிக்கைகள், அதிக மகசூலை தரக்கூடிய மற்றும் வறட்சியைத் தாங்கக்கூடிய பயிர் ரகங்களை வெளியிடுதல், வேளாண் ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகளை மேம்படுத்துதல் உள்பட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார் ஆட்சியர். மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஆர். ராஜேந்திரன், வேளாண் இணை இயக்குநர் ஜெ. சேகர், துணை இயக்குநர்கள் கோ. ராமதாஸ், சீனிவாசன் உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

---

### மக்காச்சோளத்தில் தண்டு துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை

மக்காச்சோளத்தில் தண்டு துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி என்று யோசனை தெரிவித்துள்ளார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ஜெ. கதிரவன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில், தற்போது விவசாயிகள் பெருமளவில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். இதில், ஆங்காங்கே தண்டு துளைப்பான் தாக்குதல் காணப்படுகிறது. இந்த தாக்குதலால் பாதிக்கப்பட்ட செடிகளின் குருத்து பகுதி வாடத் தொடங்கும். இலைப் பகுதியில் ஜன்னல் ஓட்டைகள் தென்பட்டு, அதில் பூச்சியின் எச்சம் காணப்படும். இதுவே தாக்குதலுக்கான அறிகுறி.

எனவே, வயல்களை அவ்வப்போது பார்வையிட்டு பாதிக்கப்பட்ட வயலில் செடியின் குருத்துப் பகுதியில் கார்போபியூரான் குருணை மருந்தை ஒரு ஹெக்டேருக்கு 20 கிலோ எடுத்து, அதனுடன் 30 கிலோ மணலை கலந்து இடலாம்.

மேலும், தண்டு துளைப்பான் முட்டையிடும் தருணத்தில் (மக்காச்சோள வயலில் செந்நிற சிறிய அந்துப்பூச்சிகள் பறக்கும் தருணம்) ட்ரைக்கோகிரம்மா சைலோனிஸ் என்னும் முட்டை ஒட்டுண்ணி அட்டையை ஒரு ஹெக்டேருக்கு 4 என்ற வீதத்தில் குச்சியில் கட்டி வயலில் ஊன்றி, வாரம் ஒரு முறை வீதம் தொடர்ந்து மூன்று வாரங்கள் கட்டி கட்டுப்படுத்தலாம். இவ்வாறு செய்வதன் மூலம், தண்டு துளைப்பானை கட்டுப்படுத்தி மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெறலாம் என்றார் அவர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

### ரூபாய் மதிப்பு சரிவால் பால் விலை உயர வாய்ப்பு

பால் சப்ளை குறைந்து வருவதால் வெகு விரைவில் பால் விலை உயர வாய்ப்புள்ளது. ரூபாய் வெளிமதிப்பு சரிவின் காரணமாக தனியார் பால் நிறுவனங்கள் பால் பவுடர் மற்றும் அதனை சார்ந்த பொருள்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்ய அதிக முக்கியத்துவம் அளித்து வருவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

கடந்த சில மாதங்களாக இதர நாட்டு கரன்சிகளுக்கு எதிராக இந்திய ரூபாயின் வெளிமதிப்பு கடுமையாக சரிவடைந்து வருகிறது. மேலும் கடந்த ஒரு மாதமாக சர்வதேச சந்தையில் விலை நிலையாக உள்ளது. இதன் காரணமாக பால் பவுடர் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களின் லாபம் அதிகரித்துள்ளது. இதனையடுத்து இந்நிறுவனங்கள் பால்பொருள்கள் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு கொள்முதல் செய்யப்படும் பாலின் கொள்முதல் விலையை ரூ.2 அதிகரித்துள்ளனர்.

இதன்விளைவாக நிறுவனங்களுக்கு பால் சப்ளை செய்ய போட்டி ஏற்படும். மேலும் பால்உற்பத்தியாளர்கள் இதனை வாய்ப்பாக பயன்படுத்தி நுகர்வோர் விலையை அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஏற்றுமதி செய்யப்படும் பால் பொருள்களின் பங்கு நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 1 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே ஏற்றுமதியால் உள்நாட்டில் பால் தேவையில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### நெல்லையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் பயிர் கடனை தள்ளுபடி செய்ய கோரிக்கை

பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யக்கோரி நெல்லையில் விவசாயிகள் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**ஆர்ப்பாட்டம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் நெல்லை மாவட்ட குழு சார்பில் நெல்லை சந்திப்பு ரெயில் நிலையம் முன்பு இன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. முன்னாள் எம்.எல்.ஏ.வும், மாவட்ட தலைவருமான எஸ்.வி.கிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

சங்க பிரதிநிதிகள் பி.பொன்னுசாமி, எஸ்.வேலாயுதம், ஆர்.ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நெல்லை மாவட்ட செயலாளர் ஆர்.கசமுத்து, மாநில

துணைத்தலைவர் பி.பெரும்படையார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

**<u>கோரிக்கைகள்</u>**

60 வயதை கடந்த அனைத்து விவசாயிகளுக்கும் மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும், ரெயில்வே துறைக்குப் போடுவதைப் போல, விவசாயத் துறைக்கும் தனி பட்ஜெட் போட வேண்டும். தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டதால், கூட்டுறவு வங்கிகளும், தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளும் பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். இந்த ஆண்டு சாகுபடிக்கு அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனை இன்றி கடன் வழங்க வேண்டும், கடந்த ஆண்டு ஏற்பட்ட பயிர் இழப்பிற்குரிய பயிர் காப்பீட்டுத் தொகையை தாமதம் இன்றி வழங்க வேண்டும், சூறைக்காற்றால் பாதிக்கப்பட்ட வாழை, நெல்லுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகள் காசி விசுவநாதன், எம்.எஸ்.கிட்டப்பா, என்.சுப்பையா, சேக்மைதீன், பி.வேல்சாமி, ஜி.ஆத்திமுத்து, சி.லட்சுமணன், சுப்பிரமணியன், பழனிவேல்சாமி, டி.ராமையா, வி.நமச்சிவயம், எம்.முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி ராதாபுரம் கால்வாயில் தண்ணீர் திறப்பு

முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி ராதாபுரம் கால்வாயில் இன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் 17 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

**<u>கோதையாறு அணை</u>**

நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுகாவில் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் பாசன தேவைகளுக்காக குமரி மாவட்டம் கோதையாறு பாசனத் திட்ட அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடுமாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு கோரிக்கைகள் சென்றன.

இதனையடுத்து குமரி மாவட்டம் கோதையாறு பாசனத் திட்ட அணைகளில் இருந்து நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுகாவில் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் பாசனத் தேவைகளுக்காக தண்ணீர் திறந்து விட முதல் –அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

**<u>தண்ணீர் திறப்பு</u>**

இதன்படி இன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. பேச்சிப்பாறை கால்வாய் நிலப்பாறை பிரிவில் இருந்து ராதாபுரம் கால்வாய்க்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவரும், நெல்லை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளருமான ஆர்.முருகையா பாண்டியன் தண்ணீரை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் நாராயண பெருமாள், மைக்கேல் ராயப்பன் எம்.எல்.ஏ., திசையன்விளை நகர பஞ்சாயத்து தலைவரும், மாநகர் மாவட்ட பொருளாருமான வக்கீல் ஏ.கே.சீனிவாசன், யூனியன் தலைவர் அழகானந்தம், ராதாபுரம் தொகுதி செயலாளர் பால்துரை, பணகுடி நகர பஞ்சாயத்து தலைவர் ஜி.டி.லாரன்ஸ், பொதுப்பணித்துறை துணை கோட்டப் பொறியாளர் தனராஜ், செயற் பொறியாளர் சுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**7 ஆயிரம் ஏக்கர்**

இதனால் ராதாபுரம் தாலுகாவில் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுவதோடு, 17 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

---

### தாராபுரம் பகுதியில் தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

தாராபுரம் பகுதியில் போதிய அளவு மழை பெய்யாததால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. மேலும் தாராபுரம், அலங்கியம், தளவாய்பட்டிணம், கோவிந்தாபுரம், பொன்னாபுரம், அங்கித்தொழுவு, குண்டடம், சூரியநல்லூர், வரப்பாளையம் ஆகிய ஊர்களை சேர்ந்த மக்கள் மழை இன்றி புற்கள் இல்லாததால் கால்நடைகளை வளர்க்க முடியாமலும், அவற்றுக்கு தீவனம் வாங்கிப்போடமுடியாமலும் தவித்தனர். சிலர் மாடு, ஆடுகளை விற்று விட்டனர்.

இந்த நிலையில் கேரளாவில் பெய்த தென்மேற்கு பருவமழையால் அமராவதி அணை நிரம்பியது. இதை தொடர்ந்து அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. தாராபுரம் பகுதியிலும் அவ்வப்போது சாரல் மழை பெய்தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக தாராபுரம் பகுதியில் தொடர் மழை பெய்தது. இதனால் வெப்பம் ஓரளவு தணிந்தது. தற்போது மேய்ச்சல் நிலங்களில் புற்கள் முளைக்க தொடங்கி விட்டதால் ஆடு மற்றும் மாடுகளுக்கு போதுமான தீவனம் கிடைக்க தொடங்கி உள்ளது. நேற்று முன்தினம் இரவு அரை மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல் ஓடியது.

---

## தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 7 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு கலெக்டர் பாஸ்கரன் தகவல்

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 7 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என கலெக்டர் பாஸ்கரன் கூறினார்.

7 லட்சம் டன்

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 7 லட்சத்து 75 டன் நெல்லும், 99 ஆயிரம் டன் சிறுதானியங்களும், 2 ஆயிரத்து 89 டன் பயறு வகைகள் என மொத்தம் 7 லட்சத்து 4 ஆயிரத்து 63 டன் உணவு தானிய உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகள் அளவிலும், கிராம அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் உணவு தானிய செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வேளாண்மைத்துறை சார்பில் நடந்த உணவு தானிய இயக்கம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா 2–வது பசுமைப்புரட்சியை உருவாக்கும் நோக்கத்தில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன்படி தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியை இரு மடங்கு அதிகரிக்கவும், மும்மடங்கு லாபம் பெறவும் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், உற்பத்தி திறனை அதிகரித்து விவசாயிகளுக்கு சந்தை நிலவரம் குறித்த ஆலோசனைகளை வழங்குதல், திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளுதல், பயிர்க்கடன் மற்றும் அரசு மானியம் உரிய விவசாயிகளுக்கு சென்று சேருவதை உறுதி செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில்

விஞ்ஞானிகள், வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயிகளை ஒருங்கிணைத்து பயிர் திட்டம் தயாரித்தல், நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கான இயக்க திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற முடியும். உணவு தானிய உற்பத்தியை பெருக்க பழைய ரகங்களுக்கு பதிலாக புதிய ரகங்களை வெளியிடுதல், திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்தல் உள்ளிட்ட தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளும், உரிய காலத்தில் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட திட்ட மேம்பாட்டு நடவடிக்கைகளும், அதிக மகசூலை தரக்கூடிய மற்றும்

வறட்சியை தாங்கக்கூடிய பயிர் ரகங்களை வெளியிடுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வேளாண்மை நலத்திட்டங்கள் மற்றும் நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்த அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ்குமார், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் சேகர், வேளாண்மை துணை இயக்குநர்கள் ராமதாஸ், சீனிவாசன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர்(பொறுப்பு) வேலாயுதம் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

## தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும்

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தர்மபுரியில் வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கூறினார்.

இயற்கை விவசாயம்

தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணாபுரத்தில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு நேற்று நடந்தது. இதில் கலந்து கொண்ட இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

இந்தியாவில் விவசாயம் லாபமற்ற தொழிலாக மாறி விட்டது. விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. காடுகளையும், மரங்களையும் அதிக அளவில் அழித்து வருவதால் மழைப்பொழிவு குறைந்துள்ளது. இதனால் விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் போதிய அளவில் கிடைப்பதில்லை.

விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் விவசாயத்தோடு கால்நடைகள், ஈரம் தாங்கி வளரும் மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டும். கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை விவசாய நிலங்களிலேயே பயிர்செய்ய வேண்டும். இயற்கை வேளாண்மை முறையை மறந்து செயற்கை உரங்களை அதிக அளவில் பயன்படுத்தியதால் உணவும், விவசாய நிலங்களும் நஞ்சு தன்மையை அடைந்து

உள்ளன. இந்த பிரச்சினைக்கு தீர்வு காண விவசாயிகள் மீண்டும் இயற்கை விவசாய முறைக்கு மாற வேண்டும்.

<u>பன்னாட்டு நிறுவனங்கள்</u>

தர்மபுரி மாவட்ட மக்களுக்கு தென்பெண்ணை ஆற்றின் தண்ணீர் கிடைப்பதை தடுக்கும் வகையில் அணை கட்டும் முயற்சிகள் நடக்கின்றன. இதனை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும். கடந்த 66 ஆண்டுகளில் இந்தியாவில் விவசாயம் மற்றும் கால்நடைகள் வளர்ப்பு குறித்து தெளிவான கொள்கைகள் உருவாக்கப்படவில்லை என்று விவசாய விஞ்ஞானி சுவாமிநாதன் கூறி உள்ளார். விவசாயத்தை பன்னாட்டு நிறுவனங்களின் கையில் கொடுப்பது என்ற கொள்கையில் மத்திய அரசு தெளிவாக செயல்பட்டு வருகிறது. விவசாயத்தை பாதுகாக்க விவசாயிகள் தங்களுக்குள் ஒருங்கிணைந்து உரிய தீர்வுகளை காணவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

## பல்லடத்திலிருந்து கேரளாவிற்கு அனுப்புவது நிறுத்தம் லட்சம் ஸ்பிரிங் கோழிகள் தேக்கம்



பல்லடம் பல்லடம் பண்ணைகளில் ஒரு லட்சம் ஸ்பிரிங் கோழிகள் : கேரள அரசு கறிக்கோழிகளுக்கு கிலோ .தேக்கமடைந்துள்ளன95 ரூபாய் என ஒரே விலை நிர்ணயம் செய்தது உள்ளூர் வரி விதித்ததைகண்டித்து தமிழகத்தில் இருந்து (பிளாட் ரேட்) தம்கடந்த மா29ம் தேதி முதல் அம்மாநிலத்திற்கு கறிக்கோழி அனுப்புவது நிறுத்தப்பட்டதுஇது தொடர்பாக கேரள கறிக்கோழி வியாபாரிகளுக்கும்., கேரள அரசுக்கும் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது.

அதுவரை தேக்க நிலையை தடுக்க தமிழக கறிக்கோழி உற்பத்தியாளர்கள் ஆந்திரா,கர்நாடகா மாநிலங்களுக்கு அதிக அளவில் கறிக்கோழிகளை அனுப்பிவருகின்றனர்இதனால் பண்ணைகளில் கறிக்கோழியின் தேக்க நிலை குறைந்து . இந்நிலையில் .வருகிறது, கறிக்கோழி குஞ்சு பொறிப்பகங்களில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டு வளர்க்கும் ஸ்பிரிங்கோழி எனப்படும் சேவல்கள் பல்லடம் சுற்றுவட்டராப்பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகிறது.

பண்ணைகளில் 55 நாள் வளர்ந்து 650 கிராம் எடை ஆனவுடன் விற்பனைக்கு அனுப்பப்படும் இந்த ஸ்பிரிங் கோழிகள் கேரள சந்தையை மட்டும் நம்பியே வளர்க்கப்படுகிறதுந்து ஆனால் ஸ்பிரிங் கோழி களை வாங்க கேரளாவில் இரு. வியாபாரிகள் வராததால் பல்லடம் சுற்றுவட்டாரப்பகுதிகளில் ஒரு லட்சம் ஸ்பிரிங் .கோழிகள் தேக்கமடைந்துள்ளன

## விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்க கோரி மனு

ஈரோடு :60 வயதை கடந்த விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்க கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கலெக்டர் அலுவலகத்தில் மனு வழங்கப்பட்டது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் மாவட்ட தலைவர் பழனிச்சாமி,மாவட்ட செயலாளர் துளசிமணி ஆகியோர் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்க்கும் கூட்டத்தில் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: 60 வயதை கடந்த விவசாயிகள் அனைவருக்கும் மாதம் ரூ.3 ஆயிரம் வீதம் ஓய்வூதியம் வழங்க வேண்டும்ரயில்வே . துறைக்கு தனியாக பட்ஜெட் போடுவது போல விவசாயதுறைக்கும் தனியாக பட்ஜெட் தம .போட வேண்டும்ிழகத்தில் கடந்த ஆண்டு வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் கூட்டுறவு வங்கிகளிலும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலும் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்கடனை முழுமையாக தள்ளுபடி செய்திட வேண்டும் . மேலும் இவ்வாண்டு சாகுபடிக்கு அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனையினற்றி கடன் வழங்க வேண்டும், கடந்த ஆண்டு பயிர் இழப்புக்குரிய பயிர் காப்பீட்டு தொகையை தாமதமின்றி உடனே வழங்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது .

## முறைகேடாக பெற்ற வறட்சி நிவாரண நிதி திருப்பி செலுத்தியதிலும் மோசடி

ஈரோடுமுறைகேடாக பெறப்பட்ட வறட்சி நிவார :ண நிதியினை மீண்டும் திருப்பி செலுத்தியதிலும் மோசடி நடைபெற்றுள்ளதாக விவசாயிகள் சார்பில் கலெக்டர் அலுவலகத்தில் புகார் மனு அளிக்கப்பட்டது. பெருந்துறை தாலூகாவுக்கு உட்பட்ட காஞ்சிக்கோவில், பள்ளபாளையம் பகுதி விவசாயிகள் சார்பில் கலெக்டர் அலுவலகத்தில் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவதுதமிழக அரசின் சார்பில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு : ஆனால் .கப்பட்டு வருகிறதுவறட்சி நிவாரண நிதி வழங், ஈரோடு மாவட்டம் காஞ்சிகோவில்,பள்ளபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் உண்மையான விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்காமல் விவசாயிகள் அல்லாத சிலரது பெயரில் வருவாய்துறை அதிகாரிகள் வறட்சி நிவாரணத்தை வழங்கி உள்ளனர்.

காஞ்சிக்கோவில், பள்ளபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மொத்தம்.ரூ .2.17 கோடி வறட்சி நிவாரணம் வழங்கியதில் ரூ.1 கோடி அளவில் முறைகேடு நடந்தது கண்டுபிடிக்கப்பட்டதுஇது தொடர்பாக முறைகேடு .களுக்கு உறுதுணையாக இருந்த வருவாய்துறையினர் மீதும் நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், முறைகேடாக பெறப்பட்ட நிதியினை சம்மந்தப்பட்ட போலி விவசாயிகள் திருப்பி செலுத்தி உள்ளனர். முறைகேடாக பெறப்பட்ட நிதிரூ.1 கோடி.ஆனால் ரூ .45 லட்சம் மட்டுமே திருப்பி செலுத்தப்பட்டுள்ளதுதிருப்பி செலுத்தியவர்களுக்கு எவ்வித . ற்றி அதிகாரிகள் மேலும் மீதமுள்ள தொகை ப .ரசீதும் அதிகாரிகள் வழங்கவில்லை முறைகேடாக பெறப்பட்ட முழு பணத்தையும் .விளக்கமளிக்க மறுத்து வருகின்றனர் மாவட்ட நிர்வாகம் திரும்ப பெற்றால் தான் உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க முடியும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது .

## பவானிசாகர் பகுதியில் கனமழை

சத்தியமங்கலம்சாகர் அருகே மரம் விழுந்து அமுக்கியதில் இலங்கை தமிழ் அகதி பவானி : பவானிசாகர்.நண்பர் படுகாயம் அடைந்தார் .பலியானார், புஞ்சை புளியம்பட்டி சுற்று வட்டார பகுதிகளில் நேற்று மாலை கனமழை பெய்ததுபவானிசாகர் இலங்கை அகதிகள் . ) முகாமைச் சேர்ந்த சுப்பிரமணி50), அவரது நண்பர் மாரிமுத்து )62) ஆகியோர் நேற்று இரவு புஞ்சை புளியம்பட்டி சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தனர்அரசு . எண்ணெய் வித்து பண்ணை அருகே சென்றபோது காற்று பலமாகவீசியதுஇதில் . சம்பவ இடத்திலேயே .அவர்கள் மீது வாகை மரம் ஒன்று சாய்ந்து விழுந்து அமுக்கியது மாரிமுத்து சத்தியமங்கலம் அரசு .அடைந்து பலியானார் சுப்பிரமணி படுகாயம் .மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்

புஞ்சை புளியம்பட்டி சுற்று வட்டார கிராமங்களான காராபாடி, காவிலிபாளையம், புங்கம்பள்ளி, மாதம்பாளையம், நொச்சிகுட்டை, பனையம்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்துள்ளனர்களை பறிக்கும் நிலையில் . இந்நிலையில் .மழை இல்லாமல் போனதால் பயிர்கள் கருகும் சூழ்நிலை உருவானது நேற◌ுறு அந்தப் பகுதிகளில் கனமழை பெய்துள்ளது மாலை .5 மணி முதல் 6.20 மணி வரை தொடர்ந்து மழை கொட்டியது .ளம் பெருக்கெடுத்து ஓடியதுசாலைகளில் வெள் . இந்த மழை மானாவாரி நிலக்கடலை பயிருக்கு பயனுள்ளதாக இருக்கும் என .விவசாயிகள் தெரிவித்தனர்

## மஞ்சூர் பகுதியில் மீண்டும் இடி, மின்னலுடன் கனமழை

மஞ்சூர்மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த ஜூன் மாதம் துவங்கிய தென்மேற்கு பருவ : பலத்த சூறாவளி காற்றுடன் .ரண்டாம் வாரம் வரை நீடித்ததுமழை ஜூலை இ இடைவிடாமல் பெய்த மழையால் மஞ்சூர் சுற்றிலும் பல்வேறு இடங்களில் மரங்கள் விழுந்தும், மண்சரிவுகள் ஏற்பட்டதாலும்போக்குவரத்துகடுமையாகபாதிக்கப்பட்டது.

மேலும் தொடர்மழையால் குந்தா, கெத்தை, அப்பர்பவானி, அவலாஞ்சி, பார்ஸன்ஸ்வேலி, எமரால்டு உள்ளிட்ட அனைத்து அணைகளும் நிரம்பின, இதனால்

மின்நிலையங்களில் உற்பத்தியும்தீவிரமடைந்தது.

இந்நிலையில் பருவ மழை படிப்படியாக குறைந்து கடந்த இரண்டு வாரங்களாக பகல் நேரங்களில் வெயில் சுட்டெரித்து வருகிறதுல் கடும் வெயிலின் தாக்கம் இரவு நேரங்களி . நேற்றுமுன்தினம் காலை காலநிலையில் திடீரென .புழுக்கத்தை ஏற்படுத்தி வருகிறது ஏற்பட்ட மாற்றத்தால் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது தொடர்ந்து மாலை .5 மணிக்கு மழை பெய்ய துவங்கி இரவு 8 மணி வரை 3 மணி நேரம் இடைவிடாமல் பலத்த மழை பெய்தது.

இடைவிடாமல் இடிமின்னலும் ஏற்பட்டதால் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டது . சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியதுடன் தாழ்வான பகுதிகளை சூழ்ந்தது . நேற்று காலை நிலவரப்படி மஞ்சூர் அருகே உள்ள கெத்தையில்32 மி .மீ மழை பெய்தது. மற்ற இடங்களில்பெய்தமழைவிவரம்வருமாறு, அப்பர்பவானி27மிமீ.,பரளி22மிமீ., பார்ஸன்ஸ்வேலி17 மிமீ., குந்தா16 மிமீ., அவலாஞ்சி16 மிமீ., சிங்காரா11 மிமீ., பைக்காரா10 மிமீ., கிளன்மார்கன்9 மிமீ., சான்டிநல்லா3.7 மிமீ., மரவகண்டி3 மிமீ., எமரால்டு3 மி.மீ மழை பதிவானது.